# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109753

1. District மாவட்டம் : திருச்சி  PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு திருச்சி  Year: ஆண்டு 2022  FIR No.: மு.த.அ. எண் 6/2022  Date: நாள் 20.05.2022

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act  Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: 1998 (as amended in 2018)  Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 19.05.22  Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 1700 hrs  Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.05.2022  Time நேரம் : 1000 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Computerised

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்  20 km Northwest

   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ந. மாணிக்கம்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் நல்லையன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1996  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் கூலி  (g) Address : முகவரி 03-101, அரிசனதெரு, கீழ கல்பாளையம் (PO), கீழ் கல்பாளையம், மண்ணச்சநல்லூர் (TK) திருச்சி Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. முருகேசன், வருவாய் ஆய்வாளர், மண்ணச்சநல்லூர் பா.க.ா., மண்ணச்சநல்லூர் (TK), திருச்சி Dt.

   2) திரு. இளவரசன், கிராம நிர்வாக அலுவலர், கல்பாளையம், மண்ணச்சநல்லூர் (TK) திருச்சி Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

மாணிக்கம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
20/5/22

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 20.05.22.

Name: பெயர் K.BALAMURUGAN
Rank: நிலை Inspector of Police, VAC, Trichy. No. எண்

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2022–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று (20.05.2022) காலை 10.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி, மண்ணச்சநல்லூர் வட்டம், கீழகல்பாளையம், இனாம்கல்பாளையம் அஞ்சல், நெ.101, அரிசனத்தெருவில் வசித்து வரும் நல்லையன் மகன் மாணிக்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் பிர்கா, வருவாய் ஆய்வாளர் திரு.முருகேசன் மற்றும் திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுக்கா, கல்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் திரு.இளவரசன் மற்றும் புகார்தாரர் திரு.ந.மாணிக்கம் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 20.05.2022 மதியம் 13.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.6/2022, சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் ந.மாணிக்கம், வயது 26/2022, த/பெ.நல்லையன், நெ.101, அரிசனதெரு, இனாம்கல்பாளையம் அஞ்சல், கீழகல்பாளையம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம். பெறுநர் உயர்திரு. லஞ்சஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி மாவட்டம் ஐயா, நான் மண்ணச்சநல்லூர் வட்டம், கீழகல்பாளையம் கிராமம், இனாம்கல்பாளையம் அஞ்சல், அரிசனத்தெருவில் எனது அம்மா புஷ்பம் மற்றும் எனது அக்கா ராமேஸ்வரி ஆகியோருடன் வசித்து வருகிறேன். என்னுடைய இன்னொரு அக்கா அம்சவள்ளிக்கு திருமணமாகி தண்டலைபுதுரில் குடியிருந்து வருகிறார். நான் எட்டாம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. நான் கூலிவேலை செய்து வருகிறேன். எனது அப்பா நல்லையன் கடந்த 26.10.1998 அன்று இறந்துவிட்டார். எனது அப்பா இறந்ததற்கான இறப்புச்சான்றிதழ் எனது அம்மா வாங்கியிருந்தார். எங்களுக்கு சொந்தமாக எங்கள் பங்காளிகளுடன் சேர்த்து எங்கள் ஊரில் பூர்வீக சொத்து உள்ளது. அந்த சொத்தினை பிரிவினை செய்வதற்காக என் குடும்பத்தாருக்கு வாரிசுச் சான்றிதழ் தேவைப்பட்டது. எனவே, வாரிசுச் சான்றிதழ் வேண்டி 15 நாட்களுக்கு முன்பு எங்கள் ஊர் கல்பாளையம் வி.ஏ.ஓ. அலுவலகத்திற்கு சென்று வி.ஏ.ஓ. திரு.இளவரசன் அவர்களை சந்தித்து விபரம் சொல்லி வாரிசுச்சான்றிதழ் கேட்டேன். அதற்கு அவர் உனக்கு வாரிசுச் சான்றிதழ் வாங்கிக்கலாம், நீ ஆன்லைனில் விண்ணப்பம் போட்டுவிட்டு வந்து என்னைப்பார் என்று சொன்னார். அதன்பேரில் நான் கடந்த 11.05.2022 அன்று எனது அம்மா புஷ்பம் பெயரில் மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர் அவர்களுக்கு வாரிசுச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பம் செய்தேன். நான் விண்ணப்பம் செய்து சுமார் ஒரு வாரத்திற்கு மேல் ஆனதால் நான் நேற்று 19.5.2022 மாலை 4 மணிக்கு வி.ஏ.ஓ.வை சந்திக்க கல்பாளையம் வி.ஏ.ஓ. அலுவலகத்திற்கு சென்றேன். வி.ஏ.ஓ. அலுவலகம் பூட்டியிருந்ததால் அங்கு நின்று கொண்டிருந்த ஒரு நபரிடம் கேட்டதற்கு, இந்த நேரத்திற்கு வி.ஏ.ஓ.வை தாலுக்கா ஆபீசுலதான் பாக்க முடியும், நீ அங்க போய் பாருப்பான்னு சொன்னார். அதன்பேரில் நான்

மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாலை 5 மணிக்கு சென்றேன். வட்டாட்சியர் அலுவலத்திற்கு உள்ளே நுழைந்ததும் வலதுபுறம் இருந்த ஆர்.ஐ. ஆபீஸ் வாசலில் எங்கள் ஊர் வி.ஏ.ஓ. இளவரசன் அவர்கள் நின்று கொண்டிருந்தார். நான் அவரைப்பார்த்து சார், நீங்க சொன்ன மாதிரி ஆன்லைனில் 11–ம் தேதியே விண்ணப்பிச்சிட்டேன் என்று சொன்னேன். அதற்கு வி.ஏ.ஓ. இளவரசன், சரி மாணிக்கம், நான் உன் மனுவை ஆர்.ஐ.க்கு பார்வேட் பண்ணிடுறேன், நீ எனக்கு தனியா ரெண்டாயிரம் ரூவா கொடுத்திடு என்று சொல்லிவிட்டு, ஆர்.ஐ. உள்ளே இருக்கார் வா, போலாம் என்று சொல்லிவிட்டு என்னையும் அழைத்துக் கொண்டு உள்ளே போனார். ஆர்.ஐ. அலுவலகத்தில் உள்ளே நுழைந்ததும் அங்கிருந்த ஆர்.ஐ. திரு.முருகேசனிடம், வி.ஏ.ஓ. இளவரசன் என்னை காண்பித்து, சார், இவர்தான் நான் சொன்ன மாணிக்கம், இவரோட வாரிசு சர்ட்டிபிகேட் சம்மந்தமான மனுவை உங்களுக்கு பார்வேட் பண்ணிடுறேன். உங்களுக்கு என்ன பார்மாலிட்டிங்கிறத இவர்கிட்ட நீங்களே சொல்லிடுங்க என்று சொன்னார். அதற்கு ஆர்.ஐ. என்னிடம், உங்க வாரிசு சர்ட்டிபிகேட் சம்மந்தமா வி.ஏ.ஓ. எங்கிட்ட சொல்லியிருக்கார். உங்க அப்பா இறந்து 25 வருஷத்துக்கு மேல ஆவுது, அதனால பன்னெண்டாயிரம் ரூபா கொடுத்தின்னா 2 நாள்ல சர்ட்டிபிகேட் வாங்கி கொடுத்திடுறேன் என்று சொன்னார். உடன் அங்கிருந்த வி.ஏ.ஓ. இளவாசனிடம் என்ன சார், பன்னெண்டாயிரம் கேக்கிறாரே என்றேன். அதற்கு வி.ஏ.ஓ. ஆமாம்பா, அவர் கேக்கிறத கொடுத்தின்னாதான் உனக்கு வாரிசு சர்ட்டிபிகேட் கிடைக்க ஏற்பாடு பண்ணுவார் என்று சொன்னார். அதற்கு நான் மீண்டும் ஆர்.ஐ. முருகேசனிடம், சார் பணம் ரொம்ப அதிகமா இருக்கு சார், கொஞ்சம் கொறச்சி கேளுங்க சார் என்றேன். அதெல்லாம் இல்லப்பா, பன்னெண்டாயிரம் கொடுத்தின்னா, உனக்கு வாரிசு சர்ட்டிபிகேட் கிடைக்க ஏற்பாடு பண்ணுவேன், இல்லன்னா, உன் பெட்டிஷன் பார்வேர்டு ஆவாது என்று கண்டிப்பா சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும் நான் வேறு வழியில்லாமல் அப்போதைக்கு அவங்க ரெண்டு பேரிடமும் சரிங்க சார் நாளைக்கு பணம் கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இது சம்மந்தமா என் அம்மாவிடம் சொன்னேன். என் அம்மாவும் லஞ்சம் கொடுக்கவேண்டாம் என்று சொன்னார்கள். என்னிடம் லஞ்சம் கேட்ட மண்ணச்சநல்லூர் பிர்கா ஆர்.ஐ.முருகேசன் மற்றும் கல்பாளையம் வி.ஏ.ஓ. இளவரசன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, Sd.xxx(ந.மாணிக்கம் 20/5/2022). <u>Submitted to the Court of Hon'ble Special Judge, Special Court for Prevention of Corruption Act Cases, Trichy</u>:- Received this report at 10.00 hrs on 20.05.2022 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.6/2022 u/s 7(a) of the PC Act 1988 (as amended in 2018) at 13.00 hrs on 20.05.2022. Sd.xxx (K.BALAMURUGAN) 20/5/22 Inspector of Police, Vigilance and Anti-Corruption, Trichy.

[signature] 20/5/22
[K.BALAMURUGAN]
Inspector of Police,
VAC, Trichy.